
எலிஜா என்ற அற்பதஅடிமை

ஒரு யூத புராணம்




மீள்உரை:
ஐசக் பாஷெவிஸ் சிங்கர்

ஓவியங்கள்:

அன்டோனியோ பிராஸ்கோனி

தமிழில்:

அருண்குமார் ஆண்டவன்



எலிஜா என்ற அற்பதஅடிமை

ஒரு யூத புராணம்

மீள்உரை:
ஐசக் பாஷெவிஸ் சிங்கர்


ஓவியங்கள்:

அன்டோனியோ பிராஸ்கோனி

தமிழில் :அருண்குமார் ஆண்டவன்

பண்டைய காலத்தில்,
தொலைதூர நிலத்தில்
செல்வந்தர்கள் பலர் வாழ்ந்த ஒரு
பெரிய நகரம் இருந்தது. அதில்
பிரம்மாண்டமான அரண்மனைகள்,
அகன்ற வீதிகள், பூங்காக்கள்
மற்றும் தோட்டங்கள் இருந்தன.






அவற்றிற்கு இடையில் சிதிலமடைந்த வீடுகள் நிறைந்த ஒரு சிறிய தெரு இருந்தது. அந்த வீடுகள் குறுகலான ஜன்னல்களும், கதவுகளும் மற்றும் ஒழுகும் கூரைகளுமாக இருந்தன. அவற்றிலிருந்த எளிமையான ஓர் குடியிருப்பில் ஒரு புனிதர் வாழ்ந்து வந்தார். அவரது பெயர் தோபியாஸ், அவரது மனைவியின் பெயர் பெனின்னா, அவர்களுக்கு மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் என ஐந்து பிள்ளைகள் இருந்தனர்.

தோபியாஸ் புனித சுருள் சுவடிகளைப் படியெடுக்கும் ஒரு எழுத்தராக இருந்தார், அதன் மூலம் அவர் சொற்பமான வருமானத்தில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

ஆனால் திடீரென்று அவர் நோய்வாய்ப்பட்டார், அவருடைய வலது கை செயலிழந்தது. விரைவில் வீட்டில் இருந்த ரொட்டிகள் தீர்ந்து போனது. எலிகள் கூட ஓடிப்போகும் நிலைக்கு பண்டகசாலை காலியாகிவிட்டது. பூனை பிடித்து உண்ண எதுவும் இல்லை. காலணிகள் இல்லாததால் தோபியாஸின் மகன்களால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. தோபியாஸின் ஆடைகள் கந்தலாகவும், கிழிந்தும் இருந்தன.

அக்கம்பக்கத்தினர் அந்தக் குடும்பத்தின் அவல நிலையைக் கண்டு உதவ முயன்றனர். ஆனால் தோபியாஸ், "கடவுள் இருக்கிறார், அவர் நிச்சயமாக எங்களுக்கு உதவுவார்" என்று கூறி அவர்களின் உதவிகளை நிராகரித்தார்.



ஒரு நாள் தோபியாஸின் மனைவி அவனிடம் சொன்னாள்: “கடவுள் நமக்கு உதவ விரும்பினால், அவர் அதை விரைவில் செய்தால் நன்றாக இருக்கும், அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஆனால் நீங்கள் வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பதால் நிலைமை கொஞ்சமும் மேம்படாது. நீங்கள் கட்டாயமாக நகரத்திற்குச் செல்ல வேண்டும். கடவுளின் அற்புதத்திற்காக காத்திருப்பதை விட, நாம் ஏதாவது செய்ய முயல்வது நல்லது. மனிதன் முதலில் செயல்படத்தொடங்கினால், கடவுள் அவனுக்கு உதவுவார்.”

உடுத்துவதற்கு உடையேதுமில்லாமல், நான் எப்படி மக்களின் மத்தியில் செல்வது?.


‘பொறுங்கள் கணவரே , நான் ஆடைகளை ஏற்பாடு செய்கிறேன்’

பிறகு பெனின்னா அண்டை வீட்டுக்காரரிடம் சென்று ஒரு கோட், ஒரு தொப்பி மற்றும் காலணிகளை இரவல் வாங்கிவந்தாள். டோபியாஸ் உடை அணிவதற்கு உதவி செய்த பின், அவன் உண்மையிலேயே ஒரு புதிய மனிதனைப் போலத் தோன்றினான். "இப்போது போங்கள் , உங்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் கிடைக்கட்டும்.“என்றாள் பெனின்னா, அவளுடைய கணவன் புறப்பட்டுச் சென்றபின், தங்களது தந்தை வெறுங்கையுடன் வீடு திரும்பக்கூடாது என்று பிரார்த்தனை செய்யும்படி குழந்தைகளிடம் கூறினாள்.



தோபியாஸ் நகரத்தின் மையத்தை அடைந்தபோது, ஒரு அந்நியன் அவனை வழிமறித்தான். அவன் உயரமாகவும், வெள்ளைத் தாடியுடனும் இருந்தான். அவன் ஒரு நீண்ட அங்கி அணிந்து, கையில் ஒரு ஊன்றுகோலை வைத்திருந்தான். "தோபியாஸ், உனக்கு அமைதி உண்டாகட்டும்," என்று கூறி, அவன் தன் கையை நீட்டினான். தன்னால் தனது வலது கையை அசைக்கக் கூட முடியாது என்பதை மறந்த தோபியாஸ் அந்த அந்நியனின் கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். இந்த அற்புதமான குணமடைதலை எண்ணி அவன் வியந்துபோனான்.





"நான் யாருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்?" என்று தோபியாஸ் கேட்டான்.

என் பெயர் எலிஜா, நான் உங்கள் அடிமை.

"எனது அடிமையா?" என்று தோபியாஸ் ஆச்சரியத்துடன் கூறினான்.

ஆம், உங்கள் அடிமை. விண்ணிலிருந்து அனுப்பப்பட்டவன். என்னைச் சந்தைக்கு அழைத்துச் சென்று, அதிக விலை கொடுப்பவருக்கு விற்றுவிடு.

"நீங்கள் சொர்க்கத்திலிருந்து வந்தவர் என்றால், நான்தான் உங்களுடைய அடிமை," என்று தோபியாஸ் பதிலளித்தான். "ஒரு அடிமை தன் எஜமானனை எப்படி விற்க முடியும்?"

“நான் சொல்வதைச் செய்“ என்று எலிஜா பதிலளித்தார்.

எலிஜா கடவுளின் தூதுவராக இருப்பதால், தோபியாஸுக்கு கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லை.



சந்தையில் தோபியாஸையும், எலிஜாவையும் சுற்றி பல செல்வந்த வணிகர்கள் கூடினர். இவ்வளவு உயர்குணம்கொண்ட, அறிவார்ந்த ஒரு அடிமை இதற்கு முன் ஒருபோதும் விற்பனைக்கு வந்ததில்லை.

வணிகர்களிலேயே பெரும் செல்வந்தரும், மேம்பட்டவருமான ஒருவர் வந்து எலிஜாவைப் பார்த்து, “ அடிமையே, உன்னால் என்ன செய்ய முடியும் ?” என்று கேட்டார்.

" நீங்கள் விரும்பும் எது வேண்டுமானாலும்," என்று எலிஜா சொன்னாள்.

“உன்னால் ஒரு அரண்மனையைக் கட்ட முடியுமா?”

“நீங்கள் இதுவரை கண்டிராத மிகப் பிரம்மாண்டமான அரண்மனையை”

“அரசனின் அரண்மனையை விடவும் பிரம்மாண்டமானதா?”

“அதைவிட பிரம்மாமண்டமானதாகவும், பெரியதாகவும்”.

“நாங்கள் எப்படி உன்னை நம்புவது?" என்று ஒருவர் கேட்டார்.

எலிஜா தன் உடைப்பையிலிருந்து மரக்கட்டைகள் இருந்த ஒரு பையை எடுத்து, அவற்றைக் கொண்டு ஒரு சிறிய அரண்மனையைக் கட்டினாள். அவள் அதை மிகவும் விரைவாகச் செய்ததாலும், அந்த அரண்மனையின் அழகு அபாரமாக இருந்ததாலும், அங்கிருந்த வணிகர்கள் அனைவரும் பிரமித்துப்போனார்கள்.

"உன்னால் இதுபோல ஒரு உண்மையான அரண்மனையைக் கட்ட முடியுமா ?" என்று ஒரு செல்வந்த வணிகர் கேட்டார்.

"இதைவிடச் சிறந்த ஒன்றை," என்று எலிஜா சொன்னாள்.


அந்த அடிமைக்கு சில அதீதசக்திகள் இருப்பதை வணிகர்கள் உணர்ந்தவுடன், உடனடியாக ஏலம் கேட்கத் தொடங்கினர். "பத்தாயிரம் குல்டன்! " என்று அவர்களில் ஒருவன் கத்தினான்.

" ஐம்பதாயிரம்! " என்றார் இரண்டாவது வணிகர்.

" ஒரு லட்சம்! " என்று மூன்றாமவர் கூறினார்.

இறுதியாக, மிக உயர்ந்த விலையான எட்டு லட்சம் குல்டனைப் பெரும் செல்வந்த வணிகர் ஒருவர் கூறினார், அவர் உடனடியாக அந்தப் பணத்தை தோபியாஸுக்குக் கொடுத்தார்.





வணிகர் எலிஜாவை நோக்கித் திரும்பி , "நீ வாக்குறுதியளித்தபடி உண்மையான அரண்மனை அழகாக இருந்தால், நான் உன்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து சுதந்திர மனிதனாக விடுகிறேன்" என்றார்.

"மிக்க மகிழ்ச்சி," என்று எலிஜா பதிலளித்தாள். பிறகு அவன் தோபியாஸிடம், "வீட்டிற்குச் சென்று உன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ். உனது வறுமை நாட்கள் முடிந்துவிட்டன,"என்றாள்.

தேவனைப் புகழ்ந்து, எலிஜாவின் உதவிக்காக அவருக்கு நன்றி செலுத்தியபின், தோபியாஸ் வீட்டிற்குத் திரும்பினான்.

அவரது மனைவி மற்றும் குழந்தைகளின் மகிழ்ச்சியானது உச்சத்தில் இருந்தது.

வழக்கம் போலவே, தோபியாஸ் பணத்தில் பத்தில் ஒரு பங்கை ஏழைகளுக்கு நன்கொடையாக அளித்தார். இப்போது அவர் ஒரு செல்வந்தராக இருந்தபோதிலும், தனக்குப் பிரியமான எழுத்தர் பணிக்குத் திரும்ப முடிவு செய்தார்.

இரவு வந்தது, எலிஜா தேவனிடம், "உமது சேவகனான தோபியாஸைக் காப்பாற்றுவதற்காக என்னை ஒரு அடிமையாக விற்றுவிட்டேன். இப்போது, அரண்மனையைக் கட்ட எனக்கு உதவுமாறு கேட்கிறேன்" என்று வேண்டிக்கொண்டார்.




உடனடியாக வானத்திலிருந்து தேவதைகள் கூட்டம் இறங்கி வந்தது. அவர்கள் இரவு முழுவதும் வேலை செய்தனர். சூரிய உதயமாகும்போது, அரண்மனை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.




செல்வந்த வணிகர் வந்து வியப்பில் ஆழ்ந்து போனார். மனிதக் கண்கள் இதற்கு முன் இவ்வளவு பிரம்மாண்டமான, பேரழுகு மிக்க ஓர் அரண்மனையைக் கண்டதில்லை.

"இதோ உங்கள் அரண்மனை," என்றாள் எலிஜா. "உங்கள் வாக்குறுதியை நினைவில் கொண்டு எனக்கு சுதந்திரத்தைத் தாருங்கள்.”

“நீங்கள் விடுவிக்கப்பட்டீர்கள், தேவனே," என்று பதிலளித்த வணிகர், இறைவனின் தூதுவருக்குத் தலைவணங்கினார்.





தேவதைகள் சிரித்தனர்.

ஏழாவது சொர்க்கத்திலிருந்து
தேவன் கீழே பார்த்துப் புன்னகைத்தார்.

தேவதைகள் தங்கள் சிறகுகளை
விரித்து, எலிஜாவைத் தங்களுடன்
அழைத்துக்கொண்டு வானத்தில்
மேல்நோக்கிப் பறந்து சென்றனர்.



முடிவு